**மிஹிந்தலை பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மிஹிந்தலை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புறநெகும செயற்திட்டத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 9,776,553 ஆன செலவினம் சபையின் செலவினமாக குறிப்பிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 1,609,744 ஆன ஊழியர் கடன் செலவினமாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் பேணப்படுகின்ற 03 காசுப் புத்தகங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,142,429 ஆன பரிமாற்று செலவினமாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் ரூபா 732,378 தொகையான வைப்புக் கடன் மீளச் செலுத்துதல் மற்றும் முற்பணக் கொடுப்பனவு செலவினமாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 05 செலவினங்களுக்குரிய இணங்கான முடியாத ரூபா 1,469,025 வருமானம் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நூலகம் மற்றும் கூட்ட மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டின் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட

கடன்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 251,573 ஆன வட்டி வருமானம் வருமான செலவினக் கணக்கில் ரூபா 451,325 ஆக காண்பித்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் ரூபா 199,752 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) கடன் மீள் கொடுப்பனவு பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,602,292 ஆன கடன் மீதி ரூபா 2,351,417 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் கடன் மூலதனம் ரூபா 251,575 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் ரூபா 20,000,000 என காண்பிக்கப்பட்டிருந்த முன்பள்ளி கட்டிடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,000,000 காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திற்கு பங்களிக்கும் கணக்கு ரூபா 18,000,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மிஹிந்தலை வாரச் சந்தை கட்டிடத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 28,226,038 தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,200,000 எனக் காண்பிக்கப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திற்கு பங்களிக்கும் கணக்கு ரூபா 27,026,038 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) 102 கடைகளுக்குரிய மீளாய்வாண்டின் கடை வாடகை வருமானம் 2,644,800 ஆக இருந்த போதிலும், கணக்குகளில் ரூபா 2,731,799 எனக் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 86,999 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) சபைக்கு சொந்தமான 04 ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக பெற வேண்டிய ரூபா 920,700 ஆன வாடகை வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,136,411 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 215,711 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மேற்பட (ஓ) பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 970,700 ஆன வருமானம் நிதிக்கூற்றுக்களில் 5-23 வருமான தலைப்பின் கீழ் சீராக்கப்பட்டிருக்கும் போது மீண்டும் வருமானமாக 5 - 24 வருமான விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) இனங்காணப்படாமல் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 807,056 காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 856,200 கூட்டுத்தொகை நிலையான சொத்துக்கள் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கி) 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 139,859 ஆன அட்டுறு செலவினம் இனங்காணப்படாமையால் பொறுப்புக்கள் மற்றும் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) ரூபா 814,294 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் உரிய சொத்துக்கள் அட்டவணையிலிருந்து அகற்றப்படாமை காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும்

மூலதன மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திற்கு பங்களிக்கும் கணக்கு அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கு) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,121,265 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 6,970,643 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 5,849,378 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை பராமரிக்கும் பி.ச 04 அறிக்கையில் குறிப்பிட்ட வருமானம் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் வருமானத்திற்கு இடையே ரூபா 1,837,800 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை ரூபா 225,775 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 622,645 என குறிப்பிடப்பட்ட காரணத்தினால் ரூபா 396,870 ஆக வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 1,668,839 பெறுமதியான 11 பெறவேண்டிய கணக்குகள் மற்றும் ரூபா 2,730,468 ஆன செலுத்த வேண்டிய 13 கணக்கு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 283,809 தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ மெய்மையாய்வு செய்யவோ முடியாதிருந்தன.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| (i) விதி 5.11 | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 203 அதிகாரத்தின் 2(1) ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான டெபே உழவு இயந்திரமொன்றும் 02 நீர் பௌசர்களும் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபை பயன்படுத்தும் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2006 நவம்பர் 14 ஆந் திகதிய 09 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற மறுசீரமைப்பு அறிக்கை | சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள 120 ஏக்கர் பரப்பளவான 45 மயான பூமி மற்றும் புதைகுழி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளியிடப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே அவற்றின் பாதுகாப்பிற்காக எல்லை வேலிகள் இடப்படாதிருந்ததுடன் சில காணிகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2006 பெறுகை வழிகாட்டிக் கோவை 2.9.1 | சபையினால் பெறுகை குழுவின் ஒரு உறுப்பினர் எவ்வித பெறுகை கூட்டத்திற்கும் சமூகமளித்திருக்க வில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விட கூடிய செலவினம் ரூபா 6,618,435 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானம் ரூபா 3,056,159 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | | 2017.01.01 மீதியில் பெறுகை | 2017 பட்டியலிடப்பட்டது காசாக | |
| | பெறுமதி | பெறுமதி | பெறுமதி | பெறுமதி | பெறுமதி |
| | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. |
| வாடகை வருமானம் | 140,605 | 2,644,800 | 2,566,250 | 2,425,645 | 219,155 |
| கேள்வி கட்டணங்கள் | 920,700 | 920,700 | - | 923,849 | - |
| கழிவகற்றல் கட்டணங்கள் | - | 551,232 | - | 594,054 | - |
| வாரச் சந்தை | - | 1,500,000 | - | 1,673,660 | - |
| மொத்தம் | 1,061,305 | 5,616,732 | 2,566,250 | 5,617,208 | 219,155 |

### 2.2.2 வீத வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக குறிப்பிடப்பட்ட ஆதனங்களின் வருடாந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வீத அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்ம மற்றும் மல கழிவுகள் எவ்வித மீள்சுழற்சி செயற்பாட்டிற்கு உட்படுத்தாமல் பிரதேசத்தின் வனாந்திரத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

#### (ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்ம மற்றும் மல கழிவுகள் இயற்கை சுற்றாலுக்கு விடுவித்தல் குழிகள் இடுதல் மற்றும் எரித்தல் காரணமாக சுற்றாடல் மற்றும் வளி மாசடைதல் இடம்பெறுவதாகவும் அவற்றை உணவாக கொள்ளும் கால்நடைகளின் சுகாதாரத்திற்கும் சவாலொன்றாக அவதானிக்கப்பட்டது.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 06 கணக்கு மீதிகளுக்குரிய ரூபா 1,410,017 கூட்டுத்தொகையான ரூபா 1,410,017 ஆக மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் வருடக் கணக்காக சபையிடம் இல்லாமல் இருந்ததுடன், அம்மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பெறுமதி குறிப்பிடப்படாத 70 பொருள் விடயங்கள் காணாமல் போயிருந்தன.

(இ) 2014 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனங்கள் கையளிக்கும் அறிக்கைகள் பரீட்சிக்கப்பட்டு சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை வருமானம் ரூபா 6,108,263 என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சபைக்கு கிடைக்கவேண்டிய மாகாண வருமான ஆணையாளர் பரிந்துரைத்த தொகை ரூபா 2,284,650 ஆக இருந்தது. மாகாண வருமான ஆணையாளரின் பரிந்துரை கிடைக்காத ரூபா 3,823,613 ஆன நிலுவை முத்திரை கட்டண அளவு ஆராய்ந்து அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1000 லீற்றர் நீர்த்தாங்கிகள் 04 பொருள் மெய்மையாய்வு பரிந்துரைகளின் பிரகாரம் உருக்குலைந்த பொருட்களாக கைதவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான பாவனைக்கு எடுக்கப்படாத மேவுகையுடன் கூடிய டேலர், டபள் கெப் வண்டியொன்று மற்றும் மோட்டார் சைக்கிலொன்றைச் உருக்குலைப்பதற்கு இடமளிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 31 கடை குத்தகையாளர்களால் உடன்படிக்கை மீறி உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டின் போதும் முறையான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கடை உரிமையாளர்களால் அனுமதியின்றி கடைகளை திருத்தியும் புதிய நிர்மாணங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2009 ஆம் ஆண்டின் பின்னர் கடைகள் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்படாத கடைகளின் எண்ணிக்கை 58 ஆக இருந்தது.

(ஈ) 02 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 3.4 வருடாந்த பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

சபைக்குச் சொந்தமான வாகனங்களில் வருமான அனுமதிப்பத்திரங்களை உரிய திகதிகள் பெற்றுக்கொள்ளாமையால் கொடுப்பனவு செய்வதற்கு தண்டப்பணம் ரூபா 6,510 ஆக இருந்தது.

**3.6 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் சேரும் திண்மக் கழிவு மற்றும் மலசல கழிவுகள் மீள்சுழற்சி செய்யப்படாமல் பிரதேசத்தின் காட்டுப்பகுதிக்கு விடப்பட்டிருந்தது.

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் 05 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 52 சதவீதத்திலிருந்து 166 சதவீதம் வரையான விலகலொன்றும் 05 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 55 சதவீதம் முதல் 4733 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன.

(ii) வட்டிக் கொடுப்பனவு, பங்கிலாபம் மற்றும் உபகாரப் பணம் செலவினமாக மீளாய்வாண்டிற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 2,065,890 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 4/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | முறையாக இனங்கண்டு தீர்வுசெய்யப்படாமை |
| (ஆ) | உள்ளகக் கட்டுப்பாடு | (i) உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்படாமை<br>(ii) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்படாமை |
| (இ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம், பெறுகை திட்டம் | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகை திட்டம் தயாரிக்கப்படாமை |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை கைச்சாத்திடாமை<br>(ii) ஆதனங்கள் முறையாக பேணப்படாமை |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | (i) வாகனங்கள் பதிவு செய்யப்படாமை<br>(ii) வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளாமை |
| (ஊ) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்யப்படாமை |